# காஞ்சி

ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை



# சேலம் சிதைகிறது!

சேலம் இரும்பு மீண்டும் பத்திரிகைச் செய்தியாகிவிட்டது!

சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை அமையுமா? அமையாதா?— இது இன்றைக்கு ஒரு கேள்விக்குரிய, விவாதத்திற்குரிய வேதனைக்குரிய பிரச்சினை ஆகிவிட்டது!

சேலத்து இரும்புக் கனிவளத்தைப் பயன்படுத்தி, ஒரு இரும்பு—எஃகுத் தொழிற்சாலை அமைப்பதற்கான வேண்டுகோள், இன்று நேற்றல்ல, பல்லாண்டுகளாக இருந்து வருகிறது. அதிலும் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை, இது ஒரு முக்கிய பிரச்சினையாகக் கருதப்பட்டு வந்துள்ளது. கூட்டம் தவருமல், இந்தப் பிரச்சினை வலியுறுத்தப்பட்டு வந்தது. மாநாடு தவருமல் இதுபற்றித் தீர்மானங்கள் போடப்பட்டன! பொருள் துறையில் பின்னடைந்து கிடக்கும் தென்னகத்தை வளப்படுத்தச் சேலம் இரும்புத் தொழிற்சாலை ஒரு முக்கிய கட்டம் என்று திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்திக் கூறியது! தொழில்துறை நிபுணர்களும், பொருளாதார ஆராய்ச்சியாளர்களும் அந்தக் கருததை ஆதரித்தனர், ஆதாரங்களைக் குவிததுக் காட்டினர்!

சேலத்தில் இரும்புக் கனிவளம் இருக்கிறது! ஆனல் அதைப் பயன்படுத்த ஒரு திட்டம் போடக்கூடிய அதிகாரம் இங்கு இல்லை, டில்லியில் இருக்கிறது!

ஒரு இரும்பு—எஃகுத் தொழிற்சாலையை ஏற்படுத்தக்கூடிய வலிவோ வாய்ப்போ தமிழகத்தி லுள்ள மாநில அரசுக்குக் கிடையாது! சொந்த வலிவு இல்லாதது மட்டுமல்ல—இந்திய அரசியலமைப்பில் பெரும்பாலான மாநிலங்களுக்கு அந்த வலிவு இல்லை — அத்துடன், திட்டம் தரக்கூடிய மத்திய அரசை வலியுறுத்திக் கேட்கக்கூடிய ஆற்றல்கூட சென்னையில் ஏற்பட்ட மந்திரிசபைகளுக்கு இதுகாறும் இல்லாது போயிற்று! மத்திய அரசிலும், மாநில அரசிலும் ஒரே கட்சி தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி வந்ததால், கட்சிக் கட்டுப்பாடு எல்லாவற்றையும் மூடி மறைத்து வைத்தது!

ஆனல் ஒரு நாட்டின் தொழில் வளர்ச்சியில் இரும்பு — எஃகு உற்பத்தி மிக முக்கியமான இடத்தை வகிக்கிறது என்பதை எவராலும் மறுக்க முடியவில்லை. இன்றைக்குள்ள பொருளாதாரத்தில் ஒரு நாட்டின் தொழில் வளர்ச்சி அதற்குக் கிடைக்கக்கூடிய இரும்பு — எஃகு அளவை வைத்து மதிப்பிடப்படுகிறது. இரும்புத் தொழில் ஒரு நாட்டு வளர்ச்சியைக் காட்டும் அளவு கோலாக இருக்கிறது.

நாட்டு வளர்ச்சிக்கும் தொழில் வளத்துக்கும் இரும்புத் தொழில் ஒரு முக்கிய கட்டமாக இருக்கிற காரணததால்தான், சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை அமைவது பற்றித் திராவிட முன்னேற்றக் கழகம் அதிக அக்கறை காட்டி வந்தது. 1957-ல் முதன்முறையாகப் பொதுத் தேர்தலில் தி. மு. கழகம் ஈடுபட்ட பொழுது, அதன் சார்பில் வெளியிடபபட்ட கருத்துச் சுவரொட்டிகளில் ஒன்றில்,

"சேலம் இரும்பு, நெய்வேலி நிலக்கரி, காவரி வட்ட எண்ணெய் தமிழகத்துக்கும் பயன்பட வேண்டாமா?"

என்று கேட்கப்பட்டிருந்தது.

சேலத்தில் இரும்பு இருக்கிறது, நெய்வேலியில் நிலக்கரி இருக்கிறது, காவிரி வட்டத்தில் எண்ணெய் இருக்கிறது! இவற்றை நிலநூல் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்! ஆனல் இவையெல்லாம் மண்ணுக்குள் புதைந்து கிடக்கின்றன. வெளியே எடுத்துப் பயன்படுத்தினுல்தான் அவை இரும்பாக, நிலக்கரியாக, எண்ணெயாகப் பலன் தரும்: மண்ணுக்குள் இருக்கிற வரை அவை மண்ணுக்குத்தான் சமர்!

மண்வளமிருக்கிறது! அவற்றைப் பயன்படுத்தக்கூடிய மனவளமும் நிறைய இங்கேஇருக்கிறது! ஆனல் பயன்படுததும் வாய்ப்பைத் தரத்தக்க திட்டவளம் இன்னும் கிடைக்கவில்லை! மாநில அரசின் பலவீனமும், மத்திய அரசின் அலட்சியமும் இரும்பை இரும்பாக ஆக்கவில்லை, இரும்பை மண்ணாகவே வைத்திருக்கிறது!

ஐந்தாண்டுத் திட்டங்கள் விவாதிக்கப்படுகிற நேரத்திலும், கேள்விகள் கேட்கப்படுகிற சமயத்திலும், மந்திரிகள் நம்பிக்கையைத் தரும் பதில்களைத்தான் தந்துவந்தனர்.

"கவனத்திலிருக்கிறது!"

"பரிசீலிக்கப்படுகிறது!"

"ஆராய்ச்சி நடக்கிறது."

"தீவிரமான கவனத்திலிருக்கிறது!"

"ஆழ்ந்த முறையில் பரிசீலிக்கப்படுகிறது!"

"நுணுக்கமான ஆராய்ச்சி நடைபெறுகிறது."

"நிபுணர்கள் பார்வையிடுகின்றனர்."

"கனிவள மாதிரி நார்வே நாட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளது, அமெரிக்கநாட்டில் ஆராய்ச்சி நடக்கிறது, ஜெர்மன் நாட்டில் பரிட்சை செய்யப்படுகிறது."

"சேலம் இரும்புத் தொழிற்சாலை நிச்சயம்தான், ஆனால் போடப்படும் இடம் இன்னும் நிச்சயமாகவில்லை, செய்யப்படும் முறை இன்னும் செப்பனிடப்படவில்லை, இருந்தாலும் வருவது நிச்சயம்!"

"வந்துவிட்டது என்றே வைத்துக்கொள்ளுங்கள், நில ஆர்ஜிதம் கூட ஆரம்பித்து விடடது."

இவ்வாறு நம்பிக்கை தரும் செய்திகள் வந்தபடி இருந்தன.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் தீட்டப்பட்ட நேரத்தில், "நெய்வேலி பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தி ஒரு இரும்புத் தொழிற்சாலை" ஏற்படுத்த வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. அதற்காக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில்

"பழுப்பு நிலக்கரிக் கட்டிகள் செய்யவும், இரும்பு உற்பத்தி செய்வதற்கான வசதிகளை உண்டாக்கவும்" என்று வகுத்து, 25 கோடி ரூபாய் அதற்காக ஒதுக்கப்பட்டது. (1961 இல் வெளியிடப்பட்ட "மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம்" என்ற நூலில் 496வது பக்கத்தில் இந்த விளக்கம் இருக்கிறது.)

1962 பொதுத் தேர்தல் நடைபெற்றதும், தோழர் சி. சுப்பிரமணியம் அவர்கள் சென்னையிலிருந்து டில்லிக்குச் சென்றார், அதிலும் எஃகு — கனரகத் தொழில் மந்திரியாக!

"நமது சுப்பிரமணியம் அங்கு இருக்கிறார், சேலம் இரும்புத்தொழிற்சாலை இப்பொழுதாவது வந்துவிடும்!" என்ற நம்பிக்கை மேலும் வளர்ந்தது.

தி. மு. கழகத்தினரை மட்டம் தட்டுவதற்காவது சேலம் இரும்புத் தொழிற்சாலையை உண்டாக்கிக் காட்டவேண்டும் என்ற எண்ணம் அவருக்கு உண்டானது.

அது மட்டுமல்ல, தென்னகம் தொழில் துறையில் பின்தங்கியுள்ளது என்ற உண்மையை உணர்ந்தவர்களில் தோழர் சி. சுப்பிரமணியம் அவர்களும் ஒருவர். ஒருமுறை — 1956 ஜூலை மாதத்தில் என்று நினைக்கிறேன் — தமிழ் நாட்டு நிதி மந்திரியாக அவர் இருந்த சமயம், அப்பொழுது கூறினார்:

> "தொழில் துறையில் தென்னாடு பின்தங்கிக் கிடக்கிறது என்பதில் எந்தவிதக் கருத்து வேறுபாடும் இருக்க முடியாது. அது வெறும் பிரசாரத்துக்காக எழுப்பப்படும் அரசியல் கோஷம் அல்ல, ஒரு நிச்சயமான உண்மை."

அவர் இவ்வாறு கூறியது தூத்துக்குடியில், அதுவும் இரும்பு — எஃகு வியாபாரிகள் மாநாட்டில்!

இரும்பு — எஃகு வியாபாரிகள் மாநாட்டில் பேசியதை இரும்பு மந்திரியாக ஆனதும் அவர் மறந்துவிட்டார் என்று கூற முடியாது. பாராளுமன்றத்தில் பேசுகிற பொழுதும், எஃகு-கனரகத்துறை ஆலோசனைக் கூட்டங்களில் பதில் சொல்லும் பொழுதும், "சேலம் இரும்புத் தொழிற்சாலை அமைப்பதுபற்றி நிபுணர்குழு விரிவான அறிக்கை தயாரித்து வருகிறது. அந்த அறிக்கை வந்ததும், வேலையைத் துவங்க வேண்டியதுதான்" என்று கூறிவந்தார்.

திரு. சி. சுப்பிரமணியம் இரும்பு மந்திரியாக வந்துவிட்ட காரணத்தினாலே, சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை வந்துவிடும் என்று தி. மு. கழகம் நம்பவில்லை. திட்டக்குழு— நிதியிலாகா — வெளிநாட்டு உதவி இப்படி பல கட்டங்களைத் தாண்டியாக வேண்டும் என்பது நமக்குத் தெரியும்.

அண்ணா அவர்கள் வேடிக்கையாகக் கூறினார்கள், "நாங்கள் கேட்டது இரும்புத் தொழிற்சாலை, இரும்பு மந்திரி அல்ல!" என்று.

இரும்பு மந்திரி தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்தான், அதனால் இரும்புத் தொழிற்சாலை வந்துவிடும் என்று முழுதும் கூறிட முடியவில்லை! இரும்புத் தொழிற்சாலை வரவும் இல்லை!

"இரும்புத் தொழிற்சாலை என்றால் இன்றைக்கு நினைத்து நாளைக்கே கட்டி முடித்து விடக்கூடிய காரியமா? ஆராய்ச்சிகள் நடத்தவேண்டாமா? சோதனைகள் பார்க்கவேண்டாமா? நிபுணர்களைக் கலந்து ஆலோசிக்க வேண்டாமா? இரும்புத் தொழிற்சாலை என்றால், ஏரிக்கரையில் மண் கொட்டுவது போன்ற சாதாரண வேலையா?" என்று சிலர் கேட்கக்கூடும்.

"இரும்புத் தொழிற்சாலை என்றால் கிள்ளுக் கீரையா? 100 கோடி ரூபாய், 200 கோடி ரூபாய் என்று முதலீடு போட்டாகவேண்டும். அவ்வளவு பெருந்தொகையைப் போடும் பொழுது, ஆராய்ந்து பார்க்காமல், அள்ளித் தெளித்துவிட முடியுமா?" என்று சிலர் நினைக்கக்கூடும்.

கனிவள ஆராய்ச்சி செய்து, எவ்வளவு அளவுக்குக் கனிப்பொருள் மண்ணுக்கடியில் புதைந்து கிடக்கிறது, எவ்வளவு தரமுள்ள கனிப்பொருள் அது, எவ்வளவு காலத்துக்கு அது கிடைக்கும், என்றெல்லாம் கனிவள ஆராய்ச்சியாளர் நிர்ணயித்தாக வேண்டும்.

இரும்புக் கனி கிடைத்தால் மட்டும் போதாது, நிலக்கரி வேண்டும். இரண்டும் கிடைக்கக்கூடிய இடத்தைத் தேர்ந்தெடுத்து, இரும்பு உருக்கு ஆலையை எந்த முறையில் அமைப்பது என்று நிர்ணயிக்க வேண்டும். அதற்கு வெளிநாட்டு உதவி பலவகையிலும் தேவைப்படுகிறது. உருக்காலை அமைப்பதற்கான சாமான்களை வெளிநாட்டிலிருந்து தருவிக்க வேண்டும், அத்துடன் அவற்றை நிர்மாணித்து, தொழிற்சாலையை வெற்றிகரமாக நடத்திக் கொடுக்கத்தக்கத் தொழிற்திறமையையும் அவர்கள் தர வேண்டும்.

இவற்றில் எதையும் நாம் மறுக்கவில்லை. ஒரு இரும்புத் தொழிற்சாலையை அமைப்பதில் பல முக்கிய கட்டங்களும் நுணுக்கங்களும் இருக்கின்றன. நமது கேள்வியெல்லாம், இவ்வளவு ஆராய்ச்சிகளையும் நுணுக்கங்களையும் தாண்டி, வடநாட்டில் மட்டும் பிரமாண்டமான இரும்புத் தொழிற்சாலைகள் வந்தபடி இருக்கின்றனவே! சேலம் இரும்புத் தொழிற்சாலை மட்டும் இன்னும் ஏன் ஒரு "பேப்பர் திட்டமாக" இருக்கிறது என்பதுதான்! அங்கும் ஆராய்ச்சிகள் நடத்தி, நிபுணர் குழுக்கள் அமைக்கப்பட்டு, வெளிநாட்டு உதவி பெறப்பட்டு, தொழிற்சாலைகள் அமையும்போது இங்கு மட்டும் மந்தமானபோக்கில், திட்டம் இன்னும், மைக்கூடு-தாள் அளவில் மட்டும் இருக்கக் காரணம் என்ன?

(13-ம் பக்கம் பார்க்க)



# வருந்துகிறோம்

மலர் 1 | 4—10—64 | இதழ் 11

ஆதித்திராவிடப் பெருங்குடி மக்களின் தலைவர் தோழர் என். சிவராஜ் அவர்கள் இயற்கை எய்திய செய்தி கேட்டு நாம் திடுக்கிட்டுப்போனோம்.

சமுதாயத்தில் பெரும் பகுதியினரான மக்களைச் சிலர், தாழ்த்திவைத்தும், அடிமைப் படுத்தியும் கொடுமை செய்து வந்த நிலை இன்று மாறியுள்ளது; ஓரளவுக்கேனும் மாறியுள்ளது. இந்த மாறுதலுக்காக உழைத்த உத்தமர்களில் தோழர் சிவராஜ் அவர்களும் ஒருவர் ஆவார்; சிறப்பான ஒருவர் ஆவார்.

இந்து மதத்தில் உள்ள கேடுபாடுகளில் தீண்டாமைக் கொடுமை மிகக் கீழ்த்தரமானது என்பதைச் சென்ற தலைமுறையில் பல நல்லறிவாளர்கள் உணர்ந்தனர். மனிதனை மனிதன் மதிக்காமல், பிறப்பினால் உயர்வு தாழ்வு காட்டி, ஒதுக்கியும் ஒடுக்கியும் வைத்து வந்தது இந்து மதம். தொட்டால் தீட்டு என்று தகாத கருத்தையும்பரப்பியது. உலகம் சகோதரத்துவத்தை உணர்ந்து தோழமை கொண்டு வளர்ந்தபோது இந்து மதம் இருட்டிலே கிடந்து உழந்தது. அந்த நாளில் தாழ்த்தப்பட்ட மக்களின் உயர்வுக்காகப் பாடுபடுவது எத்துணை இன்னல் தரும் பணி என்பதையும் எண்ணிப் பார்த்தால் தான் தோழர் சிவராஜ் போன்றோரின் தொண்டின் சிறப்புப் புலப்படும்.

தாழ்த்தப்பட்டவர்கள் என்பவர்களும் மனிதர்களே; அறிவிலும் ஆற்றலிலும் மற்றவர்களைப்போலவே அவர்களும் பெருஞ்சிறப்புப் பெறமுடியும் என்பதை மறைந்த அம்பேத்கர் போலவே சிவராஜ் அவர்களும் எடுத்துக் காட்டினார். நுட்பமான வாதங்களைக் கூறும் சட்டப்படிப்புப் படித்துத் தேறி, சட்டப் பேராசிரியராக அமர்ந்து மாணவர்களுக்கு நல்லறிவு ஊட்டும் தொண்டினைச் செய்தார், சிவராஜ் அவர்கள். தமிழர் நலனில் அக்கறை கொண்டு நீதிக்கட்சியில் ஈடுபாடு கொண்டு பணியாற்றினார். சென்னை மாநகராட்சி மன்றத்தின் மேலராக (மேயராக) இருந்து அருந்தொண்டாற்றினார். அரசு அமைத்த பல குழுக்களில் உறுப்பினராக இருந்து நல்வழி காட்டி தம்முடைய அறிவும் அநுபவமும் நாட்டுக்குப் பயன்படுமாறு வாழ்ந்தார். தம்முடைய இறுதி நாளில், குடியரசுக் கட்சியின் தலைவராக இருந்து, தாழ்த்தப்பட்ட மக்கள் நலனுக்காகத் துடிப்போடு உழைத்து வந்தார். அந்த உழைப்பிலேயே அவருடைய உயிர் பிரிந்திருக்கிறது.

இறுதி நாள் வரையில் பொதுத்தொண்டிலே ஆர்வம் காட்டி உழைத்துவந்த அந்தப் பெருமகனின் உயிர் பிரிந்தது. ஆனால் அவர் காட்டிய வழி திறந்திருக்கிறது. இளைஞர்கள் பின்பற்றத்தக்க நன்னெறியாக அவர் வாழ்வு வழிகாட்டி நிற்கிறது.

சாதி ஏற்றத் தாழ்வுகள் அற்று, அனைவரும் சரிநிகர் சமம் என்று சொல்லும் நிலையில் உள்ள சமுதாயம் உருவாவது மறைந்த அந்தப் பெரியவர்களுக்கு மட்டும் அல்ல, நாட்டுக்கும் நல்லதாகும். உழவு செய்யும் போது வயல் சமமாக இருக்கவேண்டும்; இணைந்து செல்லும் மாடுகள் சம உயரம் இருக்கவேண்டும் என்றெல்லாம் சாதாரண நிலையில் தெரியும் உண்மை, சமுதாய வாழ்விலும் புரியவேண்டும். சமுதாயம் சமநிலை பெற்றால்தான் சமாதான, நிம்மதியான நல் வாழ்வு கிடைக்கும். அதையே சான்றோர் விரும்புவர்.

சமுதாயம் ஏற்றத் தாழ்வுகள் அற்று, அனைவரும் சமம் ஆகிடவேண்டும் என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் திட்டங்களில் ஒன்று. சிவராஜ் அவர்கள் அதனாலேயே திராவிட முன்னேற்றக் கழகத்திடம் தோழமை கொண்டு தேர்தல்களில் ஈடுபட்டுவந்தார். அந்தப் பெருமகனை இழந்து வாடும் அவர் குடும்பத்தாருக்கும், நண்பர்களுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபங்களை உரித்தாக்குகின்றோம்.

★



# கைதி எண். 6342

## தம்பி!

வெளியிலிருக்கும்போதேகூட, தேதிகள் பற்றிய நினைவு எனக்குச் சரியாக இருப்பதில்லை; நானென்ன கடிகாரம் பார்த்து வேலைக்குச் சென்று காலண்டர் பார்த்துச் சம்பளம் வாங்கிப் பழக்கப்பட்டவனா! வெளியே இருக்கும்போதே இந்த நிலை என்றால், சிறைக் குள்ளே அடைபட்டுக் கிடக்கும்போது தேதி எப்படித் தெளிவாகத் தெரியப்போகிறது? இங்குதான் ஒரு நாளைக்கும் மற்றொரு நாளைக்கும் ஒரு வித்தியாசமும் தெரியாதே. அதனால்தான் வழக்குமன்றம் செல்லும் நாள், நவம்பர் 28 என்று குறிப்பிட்டேன். வழக்கு மன்றம் போய்விட்டு வந்த பிறகுதான், 29 என்பது நினைவிற்கு வந்தது.

வழக்கு மன்றம் சென்றிருந்தேன் — சென்றிருந் தேனா! அழைத்துக்கொண்டுபோகப்பட்டேன். ஒரு லாரி நிறையப் போலீஸ் — சில அதிகாரிகள்! சிறை வாயிற்படியிலிருந்து சென்ட்ரல் ரயில் நிலையத் திருப்பம் வரையில், இரும்புத்தொப்பிப் போலீசார். வழக்கு மன்றக் கட்டடத்தைச் சுற்றிலும் அதுபோலவே, காவல்.

வழக்கு மன்றம் சென்றேன். உள்ளே நாவலர், கருணாநிதி, மதி, ஆசைத்தம்பி, நடராசன், சத்திய வாணி, அலமேலு அப்பாதுரை, கபாலி, நீலநாராய ணன், எஸ். எஸ். ராஜேந்திரன் மற்றும் பலர் இருந்தனர். வழக்கறிஞர்களும் அதிகாரிகளும் நிரம்ப! என் நண்பர் வழக்கறிஞர் நாராயணசாமி இருந்தார். அங்குச் சில நாட்கள் காவலில் வைக்கப்பட்டிருந்த வழக்கறிஞர் வேலூர் நாராயணனையும் பார்த்தேன். யாரிடமும் இரண் டொரு விநாடிகளுக்குமேல் பேச அனுமதி கிடைக்க வில்லை. பேசினால்தானா! பார்த்துக்கொண்டிருப்பதும், பேச்சிலே ஒரு வகைதானே. அந்தத் திருப்தி ஏற்பட்டது.

வழக்குமன்றத் தலைவர் வந்தமர்ந்தார் — சர்க்கார் தரப்பில் வழக்கு நடத்த வந்திருந்தவர், (பப்ளிக்ப்ராசிக் கூயுடர்) வந்திருந்தார். எல்லோரும் வந்துவிட்டனர்; ஆனால் என்னுடைய 'கூட்டாளிகள்' அந்த நால்வர் காணோம். விநாடிகள் நிமிடங்களாகின்றன; வழக்கு மன்றத் தலைவர் காத்திருக்கிறார், நால்வர் வரவில்லை. இந்த வழக்கு மன்றத்துக்கு நான் முன்பொருமுறை, இதே வழக்குமன்றத் தலைவர் முன்பு கொண்டு வந்து நிறுத்தப்பட்டிருக்கிறேன் — சாட்சி சொல்ல. நண்பர் எஸ். எஸ். ராஜேந்திரன், விலைவாசிக் குறைப்புக்கான மறியலில் ஈடுபட்டதாக வழக்குத் தொடரப்பட்டபோது, என்னை வேலூர் சிறையிலிருந்து, சாட்சியம் கூற அழைத்து வந்திருந்தார்கள். அப்போது நான் கண்ட வழக்கு மன்றத் தலைவர்தான் இப்போதும்.

அரைமணி நேரம் கடந்துவிட்டது, அவர்கள் வரவில்லை. வேறு சில வழக்குகளைக் கவனித்தார் — முக்கால்மணி நேரமும் ஆகிவிட்டது, நால்வர் வரவில்லை. வழக்குமன்றத் தலைவருக்குக் கோபமும் சங்கடமும் ஏற் பட்டது. நால்வர் வரட்டும், வழக்கை எடுத்துக்கொள் வோம் என்ற எண்ணத்தில், உள்ளே சென்றுவிட்டார்.

அவர் உள்ளே சென்றுவிட்ட உடனே, அங்கு ஒரே கலகப்பு, உரையாடல், அறிமுகப் பேச்சு எல்லாம். ஆனால் அப்போதும், நான் மற்றவர்களுடன் அளவளாவ அனுமதி கிடைக்கவில்லை. சூடு சுவையற்ற சிலபற்றி மட்டும், இரண்டொரு விநாடிகள் பேச முடிந்தது.

'நால்வர்' வந்து சேர்ந்தனர்-காஞ்சிபுரத்திலிருந்து என்னோடு கிளம்பியவர்களை, 16ந் தேதிக்குப் பிறகு அன்றுதான் பார்க்கிறேன். மாப்பிள்ளைகள் போலத் தான் காணப்பட்டார்கள். எப்படி? ஏன் தாமதம்? அங்கு நிலைமை எவ்விதம்? என்று கேட்டு, அவர்கள் பதில் அளிப்பதற்குள், வழக்கு மன்றத் தலைவர் வந்துவிட்டார்; வழக்கை எடுத்துக்கொண்டார்.

குற்றப் பத்திரிகையின் பிரதிகள் எங்களுக்குத் தரப்பட்டன — இதோ இப்போது எனக்குப் பக்கத்திலே தான் இருக்கிறது — 29 தாட்கள்!

பிரதிகளைத் தந்ததுடன், எங்களைத் தனக்கு அருகே, எதிரே வந்து நிற்கும்படி அழைத்து, வழக்கு மன்றத் தலைவர், 'குற்றச்சாட்டு' இது என்பதைப் படித்துக் காட்டிவிட்டு 'என்ன சொல்கிறீர்கள்?' என்று கேட்டார்.

'இந்தத் தாள்களிலே என்ன குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பதைப் படித்துப் பார்த்துவிட்டுச் சொல்கிறேன்' என்றேன். வேறோர் நாள் வைத்துக்கொள்ளலாமா? என்று அவர் கேட்டார்; சர்க்கார் தரப்பு வழக்கறிஞர், "அவர்கள் குற்றப் பத்திரிகையைப் படிக்க அவகாசம் தரப்படவேண்டுமல்லவா — படித்துவிட்டு அவர்கள் பதில் அளிக்கட்டும்'' என்றார். நான் வேறோர் நாள் கூடவேண்டாம், இப்போதே ஒருமணி நேர அவகாசம் தரப்பட்டால்கூடப் போதும் என்றேன். நான் கேட்டுக்கொண்டபடி நண்பர் வழக்கறிஞர் நாராயணசாமி, 'வழக்கை விரிவாக நடத்திக்கொண்டுபோக என் கட்சிக்காரர்கள் விரும்பவில்லை, சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்வது போன்ற காரியம்கூட அதிக அளவில் இருக்காது, இறுதிக்கட்டத்தில், குற்றவாளிகளாகக் கொண்டுவரப்பட்டுள்ளவர்கள், தங்கள் நிலையை விளக்கி ஒரு அறிக்கை அளிக்க இருக்கிறார்கள். வழக்கைவிரைவாகவே முடித்துவிடலாம்'' என்றார்.

அன்றையதினம், என்ன சொல்லுகிறீர்கள் என்று வழக்கு மன்றத் தலைவர் கேட்டதற்குப் பதில் அளிக்காவிட்டால், அதற்காகவே வேறோர் நாள் வழக்கு நடத்தவேண்டிவரும். காலம் நீடிக்கப்படுவதை நான் விரும்பவில்லை. எனவே, வழக்கு மன்றத் தலைவரைப் பார்த்து, "ஐயா! தாங்கள் படித்த, 'குற்றச் சாட்டு' மெய்ப்பிக்கப்படுவதற்கான தகவல்கள் மட்டுமே இந்தத் தாள்களில் உள்ளன என்றால். நான் இப்போதே பதில் கூறிவிட விரும்புகிறேன், நான் குற்றவாளி அல்ல''— என்றேன். வழக்குகளில் ஏற்படும், தவிர்க்க முடியாத கட்டத்தில் ஒன்று அது. நால்வரும் அதுபோலவே கூறினர். எனவே, வழக்கு அடுத்து எடுத்துக் கொள்ளப்படும்போது, சாட்சிகள் விசாரணை என்ற கட்டம் நடைபெறும். டிசம்பர் 5-ந் தேதி பகல் 12 மணிக்கு, வழக்கு நடைபெறும் என்று அறிவித்தார். ஐவரும் ஒன்றாகப் போலீஸ் வானில் ஏறினோம்—நால்வரையும், சென்னைச் சிறைக்கே கொண்டு போகும்படி வழக்கு மன்றத் தலைவர் உத்திரவிட்டிருந்தார். அப்பாடா! என்ற ஒரு நிம்மதி எங்கள் ஐவர் பார்வையிலும். ஆனால்; அந்த நிம்மதி எதுவரையில் இருந்தது தெரியுமா, தம்பி! சிறை நுழைகிறவரையில். சிறைக்குள்ளே சென்றதும், நான் பழயபடி, 5-ம் நம்பர் அறையில், தனியனாக! அந்த நால்வர்; சிறையில் வேறோர் பகுதியில!! இது என்ன ஏற்பாடோ! ஏன் இந்த ஏற்பாடோ, புரியவே இல்லை. 16-ந் தேதியிலிருந்து அவர்களை நான் காணவில்லை, பேச நிரம்ப ஆவல். சிறையிலே எதைப் பேசி, என்ன திட்டம் போட்டு, இந்தச் சர்க்காருக்கு என்ன சங்கடத்தை நாங்கள் ஏற்படுத்திவிடப் போகிறோம், எதற்காக இப்படிப் பிரித்துப் பிரித்து வைக்கவேண்டுமோ, தெரியவில்லை.

சரி, எனக்கு அந்த ஒரு பழக்கம்–தனியனாக இருக்கும் பழக்கம்—இதுவரையில் ஏற்பட்டதில்லை; எப்போதும் நாலு பேருக்கு நடுவிலேயே இருப்பது வாடிக்கை. "அதென்ன கெட்ட பழக்கம்—தனியாக இருந்துபழகிக்கொள்'' என்று சர்க்கார் எனக்குப் போதிக்கிறது போலும். நன்றி! மகிழ்ச்சி இல்லை! நன்றி!

இன்றுதான் மேயர் தேர்தல். இதைப்பற்றி வழக்கு மன்றத்தில் வந்திருந்த நண்பர்களிடம் பேச எண்ணினேன்—முடியவில்லை. நிலைமை, சாதகமாக இல்லை என்பதை, கம்யூனிஸ்டுக் கட்சி காங்கிரசுக்கு ஓட்டு அளிக்க முடிவு செய்துவிட்டது பற்றிய செய்தியே காட்டுகிறது. கிருஷ்ணமூர்த்தி நல்லவர். நமது கழகம் அல்ல—ஆனாலும் பண்புள்ளவர்; பழகுவதற்கு ஏற்ற பெரிய மனிதர். இதனை விளக்கி, இவருக்கே ஆதரவு அளிக்கும்படி, 14-ந் தேதியே ஒரு அறிக்கை எழுதி, மாநகராட்சி மன்ற தி. மு. க. தலைவர் அ. பொ. அரசு அவர்களிடம் கொடுக்கச் செய்திருந்தேன். இடையிலே என்னை வந்து பார்த்துவிட்டுச் சென்ற முன்னாள் மேயர் முனுசாமியும், முன்னாள் துணை மேயர் செல்வராசும், அ. பொ. அரசும், எப்படியும் வெற்றி காண முயற்சி எடுத்துக்கொள்வதாகச் சொல்லிவிட்டுச் சென்றார்கள். என்ன ஆகி இருக்கும் என்பதை அறிந்துகொள்ள ஆவல்தான். என் அறைக்கு எதிர்ப்புறத்திலே சற்றுத் தொலைவிலேதான் மாநகராட்சி மன்றக் கட்டடம் இருக்கிறது. ஆனால் இது சிறை! வெளியேநடப்பது எனக்கு எப்படித் தெரியமுடியும்? எது நடைபெறுவதாயினும், நாம் நமது நண்பருக்கு ஆதரவு காட்டினோம், அதிலே ஒரு குறையும் இல்லை, களங்கம் இல்லை, என்று எண்ணித் திருப்திப்படுகிறேன். (காலமெல்லாம் எந்தக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தோழமையை விரும்பி, பெற்று, மகிழ்ந்து வந்தாரோ, அதே கம்யூனிஸ்டுக் கட்சிதான், அவரைக் கைவிட்டு விட்டது. இது, காலத்துக்கும், இருக்கப்போகும் கறை என்பதைக் கம்யூனிஸ்டுகள் உணர மறுக்கிறார்கள்.)

மாலையில், பரிமளம், வளையாபதி முத்துகிருஷ்ணனுடன் வந்து பேசிவிட்டுப் போனது மனதுக்கு மிகுந்த ஆறுதலாக இருந்தது. இத்தனை நாட்களைக் காட்டிலும் இன்று அதிகநேரமும் பேசிக்கொண்டிருந்தேன்—அதிக கலகலப்பாகவும் பேசினேன். வழக்கு தொடங்கிவிட்டது என்று ஏற்பட்ட உடனேயே, மனதிலே இருந்து வந்த ஒரு மூடுபனிவிலகிவிடுகிறது, ஒருபாரம் குறைந்துவிடுகிறது அதுதான் காரணம் என்று நினைக்கிறேன், இன்று பரிமளத்திடம் கலகலப்பாகப் பேசியதற்கு.

அவர்கள் வருவதற்குச் சிறிது நேரத்துக்கு முன்பு, பாராளுமன்ற உறுப்பினர் தருமலிங்கம் வந்திருந்தார்—டில்லியில் நடைபெற்றவைகளைப் பற்றிச் சொல்லிவிட்டுப் போனார். எனக்காகக் கொண்டுவந்த பிஸ்கட், பழங்களைக்கூட, "எனக்கு வேண்டாம், நால்வருக்குக் கொடு'' என்று கூறிவிட்டேன்.

சிறையிலே நானோர்பக்கம்! அந்த நால்வர் வேறோர் பக்கம்!

உள்ளே நான்! வெளியே; என் அன்புக்குரிய தம்பிகள்!

எத்தனை நாட்களோ! எத்தனை மாதங்களோ! யாருக்குத் தெரியும்!!

காலையில், பத்து பதினோருமணிக்குத்தான் தெரியும், மேயர் யார்? என்பது.

நமது கடமையை நாம் செய்திருக்கிறோம், வெற்றிக்காக நமது பங்கினைச் செலுத்தி இருக்கிறோம், என்ற திருப்தியுடன் இன்று படுக்கச்செல்கிறேன், ஒரு நல்லவருக்குத் தக்க மரியாதை தரப்படுகிறதா இல்லையா என்பதை நாளைக் காலையிலே தெரிந்துகொள்ளலாம், என்ற எண்ணத்துடன்.

காலையில் தெரிந்துகொண்டேன், அந்த நல்லவருக்குத் துணைநிற்க, கழகம் தவிர வேறு எவரும் இல்லாததால் மேயர் தேர்தலில் அவர் தோற்றுவிட்டார் என்பதை. இழந்த கோட்டையை ஒரு படை திருப்பித் தாக்கிப் பிடித்தால் செய்தி வெளியிடுவதுபோல நாலரை ஆண்டுகளுக்குப் பிறகு, சென்னை கார்ப்பரேஷனைக் காங்கிரஸ் கைப்பற்றிவிட்டது! என்று எல்லா இதழ்களும் பெரிய தலைப்புக் கொடுத்து, இந்தச் செய்தியை வெளியிட்டிருந்தன. திராவிட முன்னேற்றக் கழகம் வலதுசாரிக்கட்சி ஆகிவிட்டது, ஆகவே அதனுடைய ஆதிக்கத்தில், மாநகராட்சி நிர்வாகம் இருக்கவிடக் கூடாது என்ற 'தத்துவ'க் காரணம் காட்டிவிட்டு, கம்யூனிஸ்டுக் கட்சி, சென்னையின் பெரிய புள்ளிகளில் ஒருவர் என்ற நிலையில் உள்ள ஒரு குஜராத்தி பிராமணச் சீமானுக்கு வெற்றி தேடிக்கொடுத்து, பெருமை தேடிக் கொண்டது!!

தி. மு. கழகத்திடம், அடக்கமுடியாத அளவில் பகை உணர்ச்சி கொண்டநிலையில், ஆளுங்கட்சி மட்டுமல்ல, மற்றப்பல கட்சிகளும் உள்ளன. காரணம், ஒவ்வொருகட்சி ஒவ்வொரு நேரத்தில் ஒவ்வொன்று கூறுகிறது—ஆனால் உண்மையான காரணம், அடிப்படைக் காரணம், கழக வளர்ச்சியிலே அந்தக் கட்சிகளுக்கு ஏற்பட்டுவிட்ட, அருவருப்பு, திகைப்பு, ஆத்திரம். இதைப் போக்கிக்கொள்ள அவர்கள் காங்கிரசுக்கு வலிவூட்டுகிறார்கள். இது இடதுசாரிக்கொள்கையாம்!!

தி. மு. க.; சுதந்திரக்கட்சியுடன் நேசத் தொடர்பு கொண்டிருப்பது ஒன்றைத்தான், இந்தக் கட்சிகள் சுட்டிக் காட்டுகின்றன. அந்தத் தொடர்பு காரணமாக, தி. மு. க., இடதுசாரிக்கொள்கை எதனையும் இழந்து விட்டதா என்று பார்த்தால், இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. ஓரிரு திங்களுக்கு முன்புகூட நில உடைமைபற்றிய பிரச்சினை, பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு வந்தபோது, உடைமையாளர்கள் பக்கம் சுதந்திரக்கட்சி வாதாடிற்று; தி. மு. க, இடதுசாரியினர் பக்கம்தான் துணை நின்றது. இதனைப் பொதுமக்கள் அடியோடு மறந்துவிடுவார்கள் என்று இவர்கள் எதிர்பார்க்கிறார்கள்?

இதே கம்யூனிஸ்டுக் கட்சி, சென்ற பொதுத் தேர்தலின்போது, தி. மு. கழகம் சுதந்திராவுடன் தொகுதி உடன்பாடுக்கு இசைந்தபோது, அப்படி ஒரு வலதுசாரி கட்சியுடன் உங்களுக்கு ஒட்டு உறவு இருப்பதால், உங்களுடைய துணையோ, தோழமையோ வேண்டாம் என்று உதறித் தள்ளிவிடவில்லை. பேச்சு நடந்தது. இறுதியிலே முறிவு ஏற்பட்டதுகூட, தொகுதிகள் சிலவற்றை யாருக்கு ஒதுக்குவது, கழகத்துக்கா, கம்யூனிஸ்டுக்கா என்பதிலேதான், தகராறு. இது ஊரறிந்த உண்மை. அப்போது, தி. மு. க. வலதுசாரி என்று ஏசப்படவில்லை. பேச்சு முறிந்தபிறகுகூட, திருச்சியைப் பொறுத்தவரையில், கம்யூனிஸ்டு கலியாணசுந்தரம், அனந்தநம்பியார் ஆகியோருக்கு, கழக ஆதரவும், கழக எம். எஸ். மணி, அம்பில் தர்மலிங்கம் ஆகியோருக்கு கம்யூனிஸ்டு ஆதரவும், நடைமுறையில் இருந்தது; வெற்றியும் கிடைத்தது. இப்போதுதான், கம்யூனிஸ்டு கட்சி, ஒரு வெறுப்புணர்ச்சியை வளர்த்துக்கொண்டு, அதனை ஒரு 'தத்துவம்' என்ற நிலைக்குவேறு உயர்த்திக் காட்டுகிறது. ஆனால் இந்த நிலையும் போக்கும், இது போலவே இருக்கும் என்று நான் எண்ணவில்லை. அடுத்த பொதுத் தேர்தலின்போது, வேறு தத்துவம்—வேறுநிலை—மலரும் என்று நம்புகிறேன். அது அப்படி ஆவதாக இருப்பினும், கழகத்திடம், கடுங்கோபம் மூண்டநிலையில் பல கட்சிகள் இருப்பது நன்றாகத் தெரிகிறது. கழகத்தை அழிக்கும் நோக்குடன், அதனை நடத்திச் செல்பவர்களை 'ஒழிக்க'த் திட்டங்கள் போடப்படுவதாக மிரட்டல்கள் வந்தவண்ணம் இருக்கின்றன—குறிப்பாக என்னையும், கருணாநிதியையும். நான் வழக்கு மன்றம் சென்றேனே—29-ல்—அன்றுகூட வழியிலேயே என்னைத் 'தீர்த்துவிடப்'போவதாக, கடிதங்கள் வந்தனவாம்—போலீஸ் அதிகாரிகளிடம் அவை ஒப்படைக்கப்பட்டன என்று, வழக்கு மன்றத்தில் கருணாநிதி கூறக்


**'காஞ்சி' சந்தாவிகிதம்**

| | | |
|---|---|---|
| ஆண்டு சந்தா | ரூ. | 10—00 |
| ஆறுமாத சந்தா | ரூ. | 5—00 |

ஆறுமாத சந்தாவிற்குக் குறைந்து அனுப்புவதற்கில்லை.

உரிமையாளர்,
'காஞ்சி' அலுவலகம்,
சின்ன காஞ்சிபுரம்.

கேட்டேன். இன்று மாலை என்னைப் பார்க்கவந்தபோது கூட கருணாநிதி, இதுபோன்ற ஒரு செய்தியை, டெலிபோன் மூலம் தன்னிடம் யாரோ கூறியதாகவும், அந்தத் தகவலையும் போலீஸ் அதிகாரிகட்கு தான் தெரிவித்ததாகவும் கூறினார். இவை வீண் மிரட்டல்களாகவும் இருக்கலாம்—ஏதாவது நடந்தாலும் நடக்கலாம்; நடந்தால் நாம் என்ன செய்யமுடியும், திடீரென்று பாம்பு கடித்தால், பச்சிலை கிடைப்பதற்குள் ஆள் செத்துப் போவதில்லையா! என்ன நடக்கும் என்பதல்ல முக்கியம், அரசியல் எத்துணை அருவருப்பான காட்டுமிராண்டிப் போக்குக்கு இழுத்துச் செல்லப்படுகிறது என்பதுதான் முக்கியம். அத்தகைய காட்டுமிராண்டித்தனமல்லவா, கென்னடியின் உயிரைக் குடித்துவிட்டது. கொடுமை! கொடுமை!

இன்று மாலை, நாவலரும் நடராசனும் கோவிந்தசாமியும், ராஜகோபாலும், கருணாநிதியும் வழக்கறிஞர் நாராயணசாமியும் வந்திருந்தனர்.

வழக்கு மன்றத்தில் நான் தருவதாகக் கூறியுள்ள அறிக்கை எந்த முறையில் இருக்கவேண்டும் என்பது பற்றி, நாராயணசாமியிடம் சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்தேன். சட்டத்துக்கும் நீதிக்கும் உள்ள தொடர்பு, இருக்கவேண்டிய தொடர்பு, அறப்போருக்கு அளிக்கப்படவேண்டிய மதிப்பு ஆகிய கருத்துகளை, அறிக்கையில் விளக்கவேண்டும் என்பது என் எண்ணம். ஆனால் அதற்கான ஏடுகள் கிடைக்கக்கூடிய இடத்திலா நான் இருக்கிறேன். சிலவற்றை, திங்கட்கிழமை கொண்டு வந்து தருவதாக, வழக்கறிஞர் நாராயணசாமி கூறிவிட்டுச் சென்றார்.

சைதாப்பேட்டையில் வந்து பார்த்த பிறகு, ராஜகோபால் இன்றுதான் மறுபடியும் என்னைவந்து பார்க்க முடிந்தது. ராஜகோபால் வந்தாலே, மகிழ்ச்சி பிறக்கும் வழக்கமல்லவா எனக்கு! அதற்கு ஏற்றபடி, இங்கு இரண்டு நாட்களாக 'வெற்றிலைப் பாக்கு' இல்லாமல் 'வெறும் வாயனாக' இருந்துவந்தேன் — ராஜகோபால் கொண்டுவந்து கொடுத்த வெற்றிலை பாக்கு, எனக்கு மகிழ்ச்சி அளித்தது. கடந்த ஒரு திங்களாகவே, எனக்கு இருந்துவரும், இடது கை குடைச்சலுக்காக, சத்தியவாணி கொண்டுவந்த கொடுத்த 'புலித் தைலம்' வேறு எனக்குக் கிடைத்தது. அதனைத் தேய்த்துக் கொண்டு, வலி சிறிதளவு குறையும் நிலைபெற்று, அதே நினைப்புடன் இன்றிரவு படுக்கச் செல்கிறேன்.

ஞாயிறு,—சிறை சந்தடியற்றுக் கிடக்கும் நாள்' வெளியிலிருந்து யாரும் பார்க்க வரக்கூடாது, சிறை அதிகாரிகளின் நடமாட்டமும் மிகக் குறைவு, அன்று 'கைதிகள்', சீக்கிரமாகவும் பூட்டிவிடப்படுகிறார்கள். இன்று வெளிஉலகத் தொடர்பு எந்த நண்பர்கள் மூலமாகவும் இல்லை; பத்திரிகைகள் மட்டுந்தான். இன்றைய பத்திரிகையில், பண்டித ஜவஹர்லால் நேருவின் சென்னைப் பேச்சு பெரிய அளவில் இடம் பிடித்துக் கொண்டிருந்தது; அவரேகூட, பத்திரிகையாளர்களின் கூட்டத்தில் இந்தப் போக்கைக் கண்டித்திருந்தார். பண்டிதரின் பேச்சை, பத்திரிகைகள் எப்படிப் பெரிய அளவிலே வெளியிடாமலிருக்கமுடியும்! தி. மு. கழகக் கிளர்ச்சியைக் கண்டித்துப் பேசினாரே!! வழக்கமான கண்டனந்தான்—வார்த்தைகள் கூடப் புதிது இல்லை—சிறுபிள்ளைத்தனம்—கேலிக்கூத்து — இவைபோலத்தான். ஒரு நாட்டு மக்களின் மனதை வெகுவாக வாட்டி வதைத்துக் கொண்டிருக்கும் மொழிப் பிரச்சினைபற்றி காட்ட வேண்டிய அக்கறையும் கொள்ளவேண்டிய பொறுப்புணர்ச்சியும் அவருடைய பேச்சிலே மருந்துக்கும் இல்லை. அரசியல் சட்டத்தை எரித்தால் பிரச்சினை தீர்ந்துவிடுமா? என்று கேட்டிருக்கிறார். பிரச்சினை, அதனால் தீர்ந்துவிடும் என்று எண்ணிக்கொண்டு தி. மு. க. கிளர்ச்சி துவக்கவில்லை. இந்தியை ஆட்சி மொழி ஆக்குவது குறித்து இங்கு நாம் எவ்வளவு மனக்கொதிப்பு அடைந்திருக்கிறோம் என்பதை எடுத்துக்காட்டுவதே கிளர்ச்சியின் நோக்கம். இதனைப் பல கிளர்ச்சிகளை நடத்திய பண்டிதர் தெரிந்துகொள்ளாமலா இருக்கமுடியும்? அதிகாரப் பேச்சுப் பேசி இருக்கிறார், வேறென்ன கூறமுடியும்! பயப்படாதீர்கள்! அநீதி நடக்காது! என்று தைரியம் கூறி இருக்கிறார். தான் கொடுத்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்டிருப்பதாக, அடித்துப் பேசி இருக்கிறார்.

தம்பி! அவர் கொடுத்த வாக்குறுதி ஆங்கிலத்தை அகற்றமாட்டேன் — இந்தி பேசாத மக்களுடைய சம்மதம் பெறாமல் இந்தியை ஆட்சிமொழி ஆக்கிவிட மாட்டேன் — இந்தி ஆட்சி மொழியாக வேண்டுமா வேண்டாமா என்பதைத் தீர்மானிக்கும் உரிமையை, இந்தி பேசாதா பகுதி மக்களுக்கே அளிப்பேன்—என்பதாகும்.

இது அறநெறி அரசுமுறை — நேருவின் புகழ் நிலைக்குப் பொறுத்தமான முறை — ஆனால் எங்கே அந்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்டது? 1965லிருந்து இந்திதானே ஆட்சிமொழி! சட்டம் அப்படித்தானே சொல்கிறது. அதிலிருந்து ஒரு 10 வருஷ காலம், ஆங்கிலம் சில காரியங்களுக்குப் பயன்படுத்தப்படலாம்! அதுதானே பாராளுமன்றம் நிறைவேற்றியுள்ள சட்டம்!

பண்டிநேரு தந்த வாக்குறுதி, அவருடைய துரைத்தனம் நிறைவேற்றிய சட்டத்தினால் சாகடிக்கப்பட்டு விட்டிருக்கிறது.

இதனைச் சுட்டிக்காட்டியவர்கள் பலர் — இங்கு உள்ள இதழ்களில் அனேகமாக எல்லா இதழ்களுமே இதனைச் சுட்டிக்காட்டின. ஆனால் சென்னைப் பேச்சிலே அவர் அடித்துப் பேசினார், என் வாக்குறுதியை நிறைவேற்றிவிட்டேன் என்று! சரியா? நியாயமான பேச்சா?

இவரே, பாராளுமன்றத்திலே முன்பு பேசும்போது, "நான் வாக்குறுதி கொடுத்தது உண்மை—இப்போதும் அதனை மறுக்கவில்லை-ஆனால் என் வாக்குறுதியை ஒரு சட்டத்திலே எப்படி இணைக்க முடியும்!'' என்று கேட்டார். ராஜ்யசபையில், சாப்ரு எனும் மூதறிஞர், அந்த வாக்குறுதியை, ஏதாவதொரு முறையில், சட்டத்திலே இணைத்திருக்கலாம்—முடியும்—செய்திருக்க வேண்டும் என்று கூறினார். அவர் காங்கிரஸ் உறுப்பினர்.

இதனை எல்லாம் நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள், என்றாலும், சென்னையிலே பண்டிதர் பேசுகிறார், என் வாக்குறுதி நிறைவேற்றப்பட்டுவிட்டது என்று, பெரியவர்கள் இதுபோல, உண்மைக்கு மாறாகப் பேசும்போது, திகைப்புதான் ஏற்படுகிறது.

நாட்டுப் பிரிவினையை, நாம் விட்டுவிட்டதற்காகவும், நமது கழகச் சட்ட திட்டத்தைத் திருத்தி அமைத்திருப்பதற்காகவும், மகிழ்ச்சி தெரிவித்துப் பேசிவிட்டு, இது போதாது, மனம் மாறவேண்டும், இதயம் மாறவேண்டும் என்று கூறி இருக்கிறார்.

வேண்டுகோள்கள் நிராகரிக்கப்படும், மனுக்கள் குப்பைக்கூடைக்குப் போகும், நியாயங்கள் மறுக்கப்படும்—ஆனால் மனம் மாறவேண்டும்! எந்த விதமான நீதியோ, எனக்குப் புரியவில்லை!

பண்டித நேருவின் சென்னைப் பேச்சு ஒரு பெரிய நாட்டு ஆட்சித் தலைவர், நாட்டிலே எழுந்துள்ள பிரச்சினையை அலசிப்பார்த்துப் பேசும் முறையில் அமையவில்லை — ஒரு கட்சித் தலைவருடைய கண்டிப்பான பேச்சாக — அதிலும் ஆட்சியில் இருக்கிறோம், என்ற உணர்வுடன் உள்ள ஒரு கட்சித் தலைவரின் பேச்சாகவே அமைந்திருந்தது.

தம்பி! ஆளுங்கட்சியை ஆதரிக்கும் தவறான போக்கிலே கம்யூனிஸ்டுக் கட்சி சென்றுகொண்டிருப்பதனை, சுட்டிக் காட்டியிருந்தேனல்லவா! இன்று பத்திரிகையில், கேரள முன்னாள் முதலமைச்சர் நம்பூதிரிபாத், இதே கருத்தை, தெளிவாக ஒரு அறிக்கையில் கூறியதைக் கண்டு, மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். இன்றைய கம்யூனிஸ்டு போக்கு, மாறிவிடக்கூடியது என்று நான் கொண்டுள்ள நம்பிக்கையை, நம்பூதிரிபாத்தின் அறிக்கை மேலும் வலிவுபடுத்தியது. இன்று கம்யூனிஸ்டுக் கட்சி, இந்திய அரசாங்கத்து வாலாகிவிட்டது என்று அவர் கூறுகிறார். நாம் மட்டும், 'வால்' என்று ஒருவார்த்தை சொல்லிவிட்டிருந்தால், கம்யூனிஸ்டுகள் அகோரக் கண்டனக் கூச்சலிட்டிருப்பார்கள். நம்பூதிரிபாத் அத்தோடு விடவில்லை, கம்யூனிஸ்டுக் கட்சி, சுதந்திராக் கட்சிக்கும் வாலாகிவிட்டது! ஜனசங்கத்துக்கும் வாலாகிவிட்டது! என்று கண்டித்திருக்கிறார்.

பொதுவாக, மிகப்பெரிய நெருக்கடி ஏற்பட்டாலொழிய, கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்கள் இவ்விதம், 'அறிக்கைகள்' வெளியிடமாட்டார்கள். பாராளுமன்றத்தில் மூன்று மாதங்களுக்கு முன்பே ஒரு கம்யூனிஸ்டுத் தலைவர், மெத்த வருத்தத்தோடு என்னிடம் சொன்னார், 'உட்குழப்பம் ஏற்பட்டுவிட்டது; பிளவு அதிகமாகிவிட்டது; முடிவு எப்படி இருக்கும் என்று கூறமுடியாத நிலை. கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர்களிலே பலர், காங்கிரசில் சேர்ந்துவிட்டால்கூட நான் ஆச்சரியப்படுவதற்கில்லை' என்றார்.

என்றாலும், கம்யூனிஸ்டுக் கட்சியில், குறிப்பிடத்தக்கவர்கள், தவறான தத்துவத்திலும், ஆபத்தான போக்கிலும், கட்சி சென்றுகொண்டிருக்கிறது என்பதை உணரத் தலைப்பட்டிருப்பது மட்டுமல்ல, பேசவும் முற்பட்டிருப்பது, வரவேற்கத்தக்க ஒரு மாறுதலாகவே எனக்குத் தென்படுகிறது.

நாளையதினம் மறியல்-மதி தலைமையில். என்ன முறையைச் சர்க்கார் கையாள இருக்கிறதோ தெரியவில்லை, இன்று இரவு எனக்கெங்கே தூக்கம் வரப்போகிறது! இதே நினைவாகவே இருக்கும். மறியல் நடத்த விடுவார்களா? கைது செய்வார்களா? அடித்து விரட்டுவார்களா? எதையும் சொல்வதற்கில்லை, ஏனெனில் காங்கிரஸ் சர்க்காரின் போக்கு எந்த இலக்கணத்துக்கும உட்பட்டதாக இல்லை—கொச்சையாகப் பேசிக்கொள்வார்களே, சித்தன் போக்கு சிவன் போக்கு என்று, அதுபோல இருக்கிறது. எதற்கும், நாளைய தினம் மதி இங்கே வருவார் என்ற எண்ணத்துடனேயே இன்றிரவு, படுக்கச் செல்கிறேன்.

அண்ணன்,

அண்ணாதுரை

அண்ணாவின்
கருத்தோவியங்கள்

பாவையின் பயணம் ரூ. 1-50
அரசாண்ட ஆண்டி ரூ. 1-50
மதுரைக்கு டிக்கெட் இல்லை ரூ. 2-00

கிடைக்குமிடம்:
பரிமளம் பதிப்பகம்
சின்ன காஞ்சிபுரம்.

4-2-64

# அந்திக்கலம்பகம்

“உன்னோடு பேசவே கூடாது என்றுதான் எண்ணிக்கொண்டிருந்தேன். வாரத்துக்கு ஒரு தடவை வந்துபோவதற்குக் கூடவா உனக்குக் கஷ்டமாகிவிட்டது. ஒரு சமயம் இங்கே வந்துபோவது உனக்குப் பிடிக்கவில்லையோ என்னமோ...... பொன்னி வரவே இல்லையா, என்று எங்களவர்கூடக்கேட்டுவிட்டார், நான் என்னமோபோல இருப்பதைப் பார்த்து......”

“பார்த்தாயா பொன்னி! நீ ஒரு வாரம் வந்துபோகாவிட்டால், ஏமுவுக்கு எவ்வளவு மனச்சங்கடம் என்பதை......நான் வந்திருந்தேன், வாடிபட்டு! என்று கூறிவிட்டு, ஏமு ஏதேதோ வேலைகளைச் செய்து கொண்டிருந்தாடிம்மா...”

“ஏமு! எனக்குமட்டும், மன நிம்மதி ஏற்படுமா இங்குவந்து போகாவிட்டால்? ஊரிலிருந்து உறவினர்கள் வந்திருந்தார்கள் — அவர்கள் சம்பந்தமான வேலையாக அலைந்து கொண்டிருந்தேன். அதனால்தான் வந்துபோக முடியவில்லை...”

“எவ்வளவு பழகினாலும், பட்டு! பார்த்தாயா, உறவினர்கள் என்று தனியாக ஒருபாசம் வைத்துக் கொண்டுதான் பேசுகிறாள் பொன்னி ... .....”

“தப்பாக எடுத்துக்கொள்கிறீர்களே.........வந்தவர்கள் ஊருக்குப் புதுசு; இங்கு அவர்களுக்குத் தெரிந்தவர்கள் வேறுயாரும் கிடையாது ......உறவினர்களிடம் மட்டும்தானா பாசம் ஏற்படும்? சினேகம் என்றால் மட்டும் என்னவாம்? அதிலே பாசம் இல்லையா என்ன......”

“குருஷாவ்கூட, குடிஅரசுத் தலைவர் டாக்டர் ராதாகிருஷ்ணனை வரவேற்றபோது, சினேகாவுக்கும் சமாதானத்துக்கும் வாழ்த்துக்கூறுகிறேன் என்றாராம். பேப்பரில் பார்த்தேன்.”

“ரஷியாவிலேகூட, ‘சினேகா என்றுதான் பேசுகிறாளா...”

“இல்லை, ஏமு! ஒரு நாட்டுத் தலைவர் இன்னொரு நாடடுக்குப் போகிறபோது, வந்த தலைவருடைய பாஷை, பழக்க வழக்கம் இவற்றை, விருந்தளிக்கும் நாட்டுத்தலைவர் பாராட்டுவது ஒரு சம்பிரதாயம். அதன்படி, ரஷிய நாட்டுத்தலைவர் ‘சினேகா’ என்று கூறி இருக்கிறார்......”

“அதுமட்டுமில்லே! ஏமு! நம்ம நாட்டு ‘அப்பளம்’ இருக்கே, அதை, குருஷாவ் சாப்பிட்டுப் பார்த்துவிட்டு, பலே!பலே! என்று புகழ்ந்தாராம்...”

“அப்படின்னா, ‘இனி ரஷியாவுக்கு நம்மநாட்டு ‘அப்பளம’ அனுப்பலாம்



போல இருக்குதே. நிறைய வியாபாரம் ஆகுமே......”

“ஏழு! நம்ம சர்க்கார், அப்பளத் தொழிற்சாலை நடத்தின கதை உனக்குத் தெரியுமோ......”

“என்னடி இது வேடிக்கை. ஒவ்வொரு நாட்டிலே என்னென்னமோ அற்புதமான வியாபாரம், தொழில் செய்கிறதாகச் சொல்லிக்கொள்கிருங்; இங்கே அப்பளத் தொழிற்சாலை நடத்தினதாகச் சொல்கிறயே......”

“பட்டு, நடக்காததையா சொல்ரு? சென்னையிலே, சர்க்கார் அப்பளத் தொழிற்சாலை நடத்தினு, ஏழு!”

“அதையும் சரியா நடத்தவில்லை ஏழு! விற்பனையாகாமே சரக்கு தங்கி விட்டது; மக்கிப்போய்விட்டதாம்.”

“நல்லா இருக்குடி இவா தொழில் நடத்தற இலட்சணம்...”

“வேறே பெரிய பெரிய தொழில்களும் நாட்டிலே நடக்காமலில்லே ஏழு! ஆனு, அதெல்லாம் தனிப்பட்ட முதலாளிகளிடம் இருக்கு...”

“தனிப்பட்ட முதலாளிகளிடம் மோடார் தொழிலும் ஜவுளித் தொழிலும், யந்திரத் தொழிலும் இருப்பது, இவாளிடம், அதாவது சர்க்காரிடம் அப்பளத் தொழில் இருப்பதா! இதுதான் தொழில் நடத்துகிற அழகா.........”

“எப்படியோ ஒன்று, தொழில் நடந்தா போதும் என்கிற நோக்கம் சர்க்காருக்கு......”

“நல்லா இருக்குடி நியாயம். எப்படியோ ஒண்ணு வயறு நிறைந்தா போதும்னு சொல்லி, மனஷாளுக்கு ஒரு கட்டு வைக்கோலைப் போடுவது போல இருக்குது......”

“புல்லு, வைக்கோல் என்று கேவலமாப் பேசறியே ஏழு! ஒரு இடத்திலே—பஞ்சாபிலே,— மாடுகளுக்கு புல்லு வைக்கோல், கடலைப்பொட்டு பிண்ணாக்கு இவைகளைப் போடுவதற்குப் பதிலா, கோதுமையைப் போட்டார்களாம், தீனியாக.”

“இதென்னடி அக்ரமம்! கோதுமையையா, மாட்டுக்குத் தீனியாகப் போட்டார்கள். எங்கே? எங்கே? பஞ்சாபிலா! அதென்ன பட்டு! அப்படிப்பட்ட புத்தி கெட்ட வேலை...”

“புத்தி கெட்ட வேலை இல்லா ஏழு! அங்கே, மாட்டுத் தீவனத்துக்கான கட்லைப் பொட்டு, பிண்ணாக்கு இவைகளோட விலை ஏராளமா ஏறிப் போய்விட்டது. அந்த விலையைவிட, கோதுமையோட விலை குறைவு. அதனுலே, மாடுகளுக்குக் கோதுமையைப் போட்டார்களாம்...”

“பாரேண்டி அநியாயத்தை. பட்டு! இந்த விலைகளெல்லாம் இப்போதைக்கு ஒண்ணும் இறங்குவதாக இல்லையா...”

“முதலிலே பொருளை உற்பத்தி செய்து, எல்லோருக்கும் போதுமான அளவு சேர்த்தாகணும், பிறகுதான் விலை குறையும் என்று புது உணவு மந்திரி பேசியிருக்கிருரே!”

“மந்திரிதான் புதுசா வந்திருக்கிருரே தவிர, பேச்சும் யோசனையும் ரொம்ப ரொம்பப் பழசா இருக்குதே பொன்னி!”

“ஆமாம்; ஆனு அதைச் சொன்னு நம்ம பேரிலே எரிஞ்சு விழுவாளே ஆட்சியிலே உள்ளவாளுக்கு வேண்டியவா...”

“இங்கே, ஜனங்களோட வயறு காய்ந்து கொண்டிருக்குது...மந்திரிகள் யோசனைகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறதிலேயேகாலத்தை ஓட்டிக் கொண்டிருக்கிரு.”

“அந்தயோசனைகளும், படுபழசு”

“பட்டு! அப்படி ஒரே அடியாச் சொல்லிவிடலாமா! புது யோசனையும் சொல்லி இருக்கிருரே, சுப்ரமணியம்—புது உணவு மந்திரி.”

“என்ன யோசனையைச் சொல்லி விட்டிருக்கிருர் பொன்னி!”

“எலி வேட்டை நடத்தச்சொல்லி இருக்கிருர்...”

“ஏண்டி, வேடிக்கை செய்கிறயா...”

“நானு! நடந்ததைச் சொல்றேன் ஏழு! வயல்களிலே புகுந்து எலிகள் ஏராளமான தானியத்தை நாசமாக்கிவிடுது. அதனுலே உற்பத்தி குறையுது. ஆகையாலே, எலிகளை வேட்டையாடிக் கொன்று போட வேண்டும்; அதற்காக ஒரு நாள் நடத்தலாம்; அதை ஒரு தேசீய சேவையாக எண்ணிக்கொண்டு செயல்படலாம் என்று மந்திரி சுப்ரமணியம், பார்லிமென்டிலேயே பேசி இருக்கிருர்...”

“எலி வேட்டை நடத்துகிற திட்டத்தைப் பற்றியா, பேசினுர் பார்லிமென்டிலே...”

“ஆமாம் ஏழு! நான் கிண்டலுக்காகச் சொல்லவில்லை...”

“பொன்னி! சில ஜாதிக்காரர்கள் எலிகளைத் தின்பாளாமே ..”

“இதிலே என்னடி பட்டு! ஆச்சரியம். அமெரிக்காவிலே இப்போது, ரொம்ப விருப்பமாகச் சாப்பிடுகிருர்களாம், தவளை இருக்கு பாரு, அதனுடைய கால்களை...”

“கர்மம்! கர்மம்! எப்படித்தான் மனம் ஒப்பிச் சாப்பிட்டுத் தொலைக்கிருர்களோ, தெரியவில்லை. பொன்னி! எலி, விஷமில்லையோ...”

“எலிக்கு விஷமிருக்குதோ இல்லையோ அது கிடக்கட்டும் ஏழு! சீனுக்காராள், விஷப் பாம்புக்கறியையே விருப்பமாகச் சாப்பிடுவார்களே அதற்கு என்ன சொல்கிறே...”

“என்னத்தைச் சொல்ல. எது எதிலேயோ அவர்களெல்லாம் நாகரிகமாகி விட்டதாகச் சொல்லிக் கொண்டாலும், இந்தச் சாப்பாட்டு விஷயத்திலே, அசல் காட்டுமிராண்டிகளாக இருக்கிருர்கள் என்பதுதான் விளக்கமாகத் தெரியுது.”

“உணவு நெருக்கடி அதிகமாகி விட்டா, ஏழு! நம்ம சர்க்காரும், கிடைக்கறதை உணவாக்கிச் சாப்பிட வேண்டியதுதான் என்று உத்திரவு போட்டுவிடுவா, தெரியுதா...”

“போடுவாடி போடுவா! அதுக்குள்ளே ஜனங்க போட்டுவிடுவா உத்திரவு, சோறு போடக்கூட வக்கு இல்லாதவாளுங்குச் சர்க்காரைநடத்துகிற வேலை எதற்கு; விட்டுவிட்டுப் போங்க என்று...”

“அது அவ்வளவு சுலபமான காரியமா...”

“ஏன்! ராணுவ பலத்தைக் காட்டி ஆட்சி நடத்திககொண்டிருக்கிற அயூப்கானை எதிர்த்து ஜின்னுவோட உடன்பிறந்த பாதிமா, தேர்தலிலே நிற்கப் போவதாகப் பார்த்தேனே பேப்பரிலே. அந்த நாட்டிலேயே அவ்வளவு தைரியம் பிறந்திருக்கறபோது, இது ஜனநாயக நாடுதானே மக்கள் வைததுதானே சட்டம், இங்கே ஒரு ஆட்சி இப்படியே போய்க்கொண்டிருந்தா, ஜனங்கள் சீறி எழாமலா இருப்பார்கள்...”

“உண்மைதான் பொன்னி! யாரோ ஒரு மந்திரியே பேசியதாக ஞாபகம் — உணவு நிலைமை மோச

மாகிக்கொண்டே போனா பெரிய கலகமெல்லாம் மூண்டுவிடும்னு...''

"சமுதாயநலத் திட்ட மந்திரிதான் அப்படிப் பேசினார். பேர், 'டே' என்பது..."

"மற்ற மந்திரிகள் அவர்மீது கோபித்துக்கொள்ளவில்லையோ?"

"கோபம் ஏற்படாமலா இருக்கும். ஒருவர், சமுதாயநலத் திட்டவேலையே ஒழுங்காக நடக்கவில்லை, உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டியது, சமுதாயநலத்திட்ட இலாகாவுக்கும் பொறுப்பான வேலைதான்; ஆனா அந்த வேலையை, சமுதாய நல இலாகா ஒழுங்காகவும், திறமையாகவும் செய்யவில்லை என்று கண்டித்துப் பேசினார்..."

"ஆமாம் பொன்னி! இப்படி இந்த மந்திரிகள் ஒருவர் மீது ஒருவர் குறை சொல்லிக்கொண்டிருந்தா, காரியத்தைச் செய்வதுதான் யாரு? இவர்களெல்லம் ஒழுங்காகவும் திறமையாகவும் காரியம் செய்வார்களென்றுதானே மக்கள் 'ஓட்டு' போட்டு, இவர்களை ஆளச்சொல்லி அனுப்பினா..."

"ஆமாம். ஆனா இப்படி எல்லாம் பேசினா, காங்கிரஸ் தலைவர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமோ? எங்களைவிட்டா, உங்களுக்குவேறே யார் இருக்கிறா? வேறு யாருக்கு இந்த ஆட்சியை நடத்துகிற யோக்யதை இருக்குது என்று கேட்கிறார்களே கோபமாக."

"நல்லா இருக்குதுடி இந்த நியாயம். நான் இல்லையானா உனக்கு தகனகாரியம் செய்ய, யார் இருக்கிறா, வா, இப்பவே உன்னைச் சுடுகாட்டிலே வைத்து, கொளுத்தி விடுகிறேன் என்று, தாயாரைப் பார்த்து சொல்கிற அக்ரமப் பிள்ளையின் பேச்சு போல இருக்குது, இந்தப் பேச்சு..."

"ஜனங்களுக்கு, மயக்கம் இருக்குது பொன்னி! காங்கிரஸ் தலைவர்கள், காந்தி பக்தர்கள், சுயராஜ்யத்துக்காகப் பாடுபட்டவர்கள், அதனாலே, அவர்களுக்கு 'ஓட்டு' போடுவதுதான் தர்மம் என்ற மயக்கம்..."

"மயக்கம்தானே, பட்டு! மயக்கம்னுதானே சொல்கிறே. மயக்கம் தெளியாமலா போகும்..."

"தெளியாவிட்டா, ஏமு! என்ன நடக்கும் தெரியுமோ. வேறே ஒருவருக்கும் ஆட்சி நடத்தும் யோக்யதை கிடையாது. ஆகையாலே இனி நாங்களே நிரந்தரமாக ஆட்சியிலே இருந்துவிட முடிவுசெய்துவிட்டோம். அதனாலே இனி இந்த நாட்டிலே போட்டிக்கட்சிகளே இருக்கக்கூடாது என்று சட்டமே போட்டுவிடுவா......"

"ஜனநாயகம் என்ன ஆவது அப்படிச் சட்டம் செய்துவிட்டா?"

"இது ஒரு புதுமாதிரி ஜனநாயகம் என்று தத்துவம் பேசிவிட எவ்வளவு நேரம் பிடிக்கும். இப்ப, ரஷியாவிலோ, சைனாவிலோ, ஈஜிப்டிலோ கேட்கிறார்களா ஜனங்க, ஏன் இங்கே வேறே கட்சிகளே இல்லை என்று......"

"ஆமாம் ஏமு! அங்கே ஒரே கட்சிதான்; ஆளுங்கட்சி"

"எதிர்ப்பே கிடையாதோ அங்கே. அதிருப்திப்பட்டவாளெல்லாம் என்ன செய்கிறா."

"ஒண்ணும் செய்யமுடியாது ஏமு! எதிர்த்துப் பேசினா, தீர்ந்தது, நாட்டை விட்டுத் துரத்திவிடுவது, தூக்கிலே போடுவது, அல்லது வருஷக்கணக்கிலே ஜெயில் இப்படி எதாவதுதான் நடக்கும்."

"ஜனங்கள் எது நடந்தாலும் சரி என்று இருந்துவிடுகிறார்களோ?"

"ஆமாம். சில பேருக்கு, அருவருப்பு அச்சம், கோபம் ஏற்பட்டா, உடனே நாட்டை ஆளுகிற தலைவர் பேசுவார், இந்த நாட்டை விடுவிக்க நான் பட்ட கஷ்டம், செய்த தியாகம் உங்களுக்குத் தெரியாதா? எனக்கு இல்லாத நாட்டுப் பற்று, வேறே யாருக்கு வரமுடியும்? நான் எந்தச் செயலிலே ஈடுபட்டாலும் அது மக்களுடைய நன்மைக்காகத்தானே தவிர, என் நன்மைக்கா? என்று இப்படி உருக்கமாகப் பேசி, மக்களைச் சமாதானப்படுத்தி விடுவார்."

"அதையும் மக்கள் நம்பிவிடுகிறார்களா, ஆராய்ந்து பார்க்காமல்..."

"நம்புகிறார்களே; ஆப்பிரிக்கா பகுதியிலே, புதிதாக விடுதலை பெற்ற நாடு என்று—பெயர் மாளவி—என்பது. அதனுடைய ஆட்சித் தலைவர் பெயர் ஏஸ்டிங்ஸ் பண்டா என்பது. அவருடைய ஆட்சி முறையிலே சிலருக்குக் கோபம், எதிர்ப்பு ஏற்பட்டது. என்ன செய்தார் தெரியுமோ, பண்டா? எதிர்ப்பு தெரிவித்த சில மந்திரிகளையே பிடித்து உள்ளே போட்டுவிட்டார். போட்டுவிட்டு, ஜனங்களைப் பார்த்து, "தெரியுமா, தெரியுமா! படுபாவிகள் சிலர், என்னைச் சாகடிக்க, சூனியக்காரர்களிடம் யோசனை கேட்டார்கள்; அந்தச் சூனியக்காரர்கள் மிகுந்த தேசபக்தி கொண்டவர்கள், அதனால் சதியிலே ஈடுபட மறுத்துவிட்டார்கள், இல்லையானால், இந்நேரம் என்னை என் எதிரிகள் சூனியம் வைத்துக் கொன்றுபோட்டு விட்டிருப்பார்கள் என்று பேசினார்..."

"சூனியம் வைத்துச் சாகடிப்பது என்பதை அந்த மாளவி நாட்டு மக்கள், கண்ணை மூடிக்கொண்டு நம்பிவிட்டார்களா..."

"அதென்ன ஏமு! அந்த நாட்டுக்காரர்களைப் பற்றிக் கேட்கிறாய். நம்ம நாட்டிலே இல்லையா, பேய், பூதம், பில்லி சூனியம், மாயம் மந்திரம், வசியம் கட்டு இவைகளை நம்பிக் கொண்டிருப்பவர்கள்..."

"பொன்னி கேட்பது சரியான கேள்வி. நம்ம நாட்டிலே அதிகம் பேர் இருக்கிறார்கள், இப்படிப்பட்ட மூடநம்பிக்கைகளிலே பிடிபட்டு."

"நேரு பண்டிதர் காலமான உடன் டில்லிப் பட்டணத்திலே ஜோதிடர்களுக்கு ஏகப்பட்ட கிராக்கியாம் ஏமு! ஏன் தெரியுமா? பல தலைவர்கள், நேருவின் இடம் தனக்குக் கிடைக்குமா என்பது பற்றி ஜோதிடம் பார்த்துக் கொள்ளக் கிளம்பினார்களாம்..."

"மந்திரிகளே இந்த இலட்சணத்தில் இருந்தால், ஏதுமறியாதமக்கள் ஜோதிடம் போன்றவைகளிலே நம்பிக்கை கொள்வதிலே ஆச்சரியப்பட என்ன இருக்கிறது."

"மந்திரி வேலை என்பது ஒரு பதவிதானே ஏமு! மனப்பான்மை, பதவி காரணமாக அடியோடு மாறியாபோய்விடும். மூடநம்பிக்கை என்பது எல்லா மட்டத்திலும் இருக்கும்; எல்லா நாடுகளிலும் இருக்கும்."

"ஆனால் நம்முடைய நாட்டிலே, இந்த மூடநம்பிக்கை மிக அதிகம். பண்டித நேரு, தனது மரணத்தையொட்டி எந்தவிதமான வைதீகச் சடங்குகளும் செய்யக்கூடாது என்று முன்கூட்டியே எழுதிவைத்து விட்டுத்தான் போனார். ஆனால் அவருடைய வலதுகரம்போல உள்ளவர்கள் எல்லாவிதமான வைதீகச் சடங்குகளையும் செய்தார்கள்..."

"இதைப் படித்தாயா பட்டு! பத்திரிகைகளில், புதுவையிலே புதிதாக மந்திரியான ஒருவர், திருப்பதிக்குப் போய், தலையை மொட்டை அடித்துக்கொண்டாராம். அவ்விதமாக ஒரு பிரார்த்தனை செய்துகொண்டேன் தேர்தலின்போது என்று சொல்லி இருக்கிறார்..."

"அப்படியானால் பொன்னி! இவர் மக்களுடைய ஓட்டுகளால் வெற்றி பெற்றதாக ஒப்புக்கொள்ளமாட்டார் போலிருக்கிறது..."

"இதிலே என்ன வேடிக்கை ஏமு! நம்ம நாட்டிலே, ஒருவர் இன்னொருவரைப் பார்த்து, எத்தனை குழந்தைகள் உங்களுக்கு என்று கேட்டால், பதில் என்ன சொல்லுகிறார்கள்? கடவுள் ஆறு ஆண் குழந்தைகளையும் மூணு பெண் குழந்தைகளையும் கொடுத்திருக்கிறார் என்றுதான் பதில் சொல்லுகிறார்கள்."

"எல்லாவற்றையும் தூக்கிக் கடவுள் தலையிலே போட்டுவிடுகிறார்கள்.

"அப்படித்தான்! ஒரு வேலையும் செய்யாமல், தெருத்திண்ணையிலே உட்கார்ந்திருக்கிறார்களே சிலர், அவர்களைக் கேளேன், என்னப்பா செய்கிறாய் என்று. 'சும்மா சிவனே என்று உட்கார்ந்துகொண்டிருக்கிறேன் என்றுதான் சொல்கிறார்."

"ஒரு வேலையும் செய்யாமல் காலத்தைக் கொன்றுகொண்டு இருப்பவர்களை நல்வழிப்படுத்த கிராமக் கைத்தொழில் இலாக்கா இல்லையோ......"

"இருக்கே! ஆனா, பட்டு! அந்த இலாகா, சரிவர நிர்வாகம் பார்த்து, கணக்கை ஒழுங்காக வைத்துக் கொண்டு இல்லை என்று புகார் கிளம்பி இருக்குது."

"இது என்னடி அநியாயம். அத்திப் பழத்தைப் புட்டால் அத்தனையும் சொத்தை என்பதுபோல இருக்குதே."

"அத்திப்பழம் என்றதும் கவனம் வருது. நம்ம நாட்டு வாழைப்பழத்துக்கு ஏகப்பட்ட கிராக்கியாமே பொன்னி! வெளிநாடுகளிலே..."

"ஆமாம் பட்டு! வாழைப்பழத்திலே இருக்கிற சத்து ஆப்பிள்பழத்திலே கூடக் கிடையாது. ஆனா இப்ப நம்மநாட்டிலே உணவுக்குத் திண்டாட்டம் ஏற்பட்டிருக்கிறபோது வாழைப்பழத்தை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது நியாயமில்லை......"

"ஏற்றுமதி செய்வதாலேதான், இங்கே வாழைப்பழம் ஏகமாக விலை ஏறி இருக்குது......"

"ஏமு! உனக்கு நல்ல வாழைப்பழம் வேணுமானா சொல்லு.: எனக்குத் தெரிந்த கடை இருக்குது..."

"இருக்கா? வாயேன், போய்வருவோம். ஒரு நாலு சீப்பு வாங்கிக் கொண்டு வருவோம்......"

"போகலாமே, பட்டு! நீயும் வருவதற்கு என்ன?"

அவளுக்கென்ன, அவர் வருவாரே என்ற கவலையா இருக்கப் போகுது. கிளம்பு பட்டு! பொழுது போவதற்குள் போய்விட்டு வந்து விடலாம்."

✻

---

3-ம் பக்கத் தொடர்ச்சி

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பிலாய், துர்காபூர், ரூர்கேலா ஆகிய மூன்று பிரமாண்டமான இரும்புத் தொழிற்சாலைகள் உருவாயின. இந்த மூன்று தொழிற்சாலைகளுக்கும் ஒதுக்கப்பட்ட பணம் 660 கோடி ரூபாய்!

660 கோடி ரூபாயை செலவழித்து, பிலாய் தொழிற்சாலையை உருவாக்கமுடிகிறது, ரூர்கேலாவை கட்டிக் காட்டமுடிகிறது, துர்காபூரை நிர்மாணிக்க முடிகிறது, அதில் பத்தில் ஒரு பங்கு தொகையைப் போட்டு, சேலம் இரும்பு தொழிற்சாலையை ஏன் ஆரம்பித்து வைத்திருக்கக் கூடாது?

இரும்புத் தொழிற்சாலைகளை அமைக்க வெளிநாட்டு உதவியும் திறமையும் ஏராளமாகப் பெறப்பட்டிருக்கின்றன. ருஷிய உதவியுடன் பிலாய் இரும்புத் தொழிற்சாலை கட்டப்பட்டது. பிரிட்டிஷ் உதவியுடன் துர்காபூர் தொழிற்சாலையும், ஜெர்மன் உதவியுடன் ரூர்கேலா தொழிற்சாலையும் அமைக்கப்பட்டுள்ளன! அந்தத் தொழிற்சாலைகளுக்குக் கிடைத்த உதவியும் திறமையும் இதுகாறும் சேலம் இரும்புத்தொழிற்சாலையை அமைக்க ஏன் பயன்படவில்லை?

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இரும்பு — எஃகுத் தொழில் வளர்ச்சிக்காக 660-கோடி ரூபாய்க்கு திட்டங்கள் வகுத்தது மட்டுமல்ல, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் 525 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்தத் திட்டத்தில் உள்ள முக்கிய பகுதிகள் :

பிலாய் இரும்புத் தொழிற்சாலையை விரிவுபடுத்த ரூ. 138 கோடி.

ரூர்கேலா இரும்புத் தொழிற்சாலையை விரிவுபடுத்த ரூ 90 கோடி.

துர்காபூர் இரும்புத் தொழிற்சாலையை விரிவுபடுத்த ரூ 56 கோடி.

துர்காபூரில் புதிதாக உயர்தரக் கலவை எஃகு உற்பத்தி செய்ய ரூ. 50 கோடி.

இவ்வாறு இரண்டாவது திட்டத்தில் உண்டாக்கப்பட்ட மூன்றும் பெரும் இரும்புத் தொழிற்சாலைகளை விரிவுபடுத்தத்தான் திட்டக் குழு கண்ணும் கருத்துமாக இருக்கிறது. முன்பு பத்து லட்சம் டன் இரும்பு உற்பத்திக்கு என ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலை, இப்பொழுது 25-லட்சம் டன் அளவுக்கு உயர்த்தப்படுகிறது. அதற்காக 138கோடி ரூபாய் ஒதுக்க அரசாங்கம் தயங்குவதில்லை.

உண்டாக்கப்பட்ட தொழிற்சாலையை இரண்டு பங்காக விரிவுபடுத்தும் இரண்டாவது கட்டம் அங்கு வந்துவிட்டது. இங்கு, சேலத்து இரும்பைப் பயன்படுத்தும் திட்டம் இன்னும் உருவாக்கப்படவே இல்லை!

"வரப்போகிறது, வரப்போகிறது, வந்துவிடும், நிச்சயமாக வந்துவிடும்" என்று வாய்ப்பேச்சு இருக்கிறதே தவிர, தொழிற்சாலை இன்னும் அமையவில்லை!

இந்த நிலையில் சிறிதளவாவது நம்பிக்கை தந்துகொண்டிருந்த திரு. சி. சுப்பிரமணியம் அவர்களும் இரும்பு மந்திரிப் பதவியை விட்டு, உணவு மந்திரிப் பதவிக்குச் சென்றுவிட்டார். புதிய இரும்பு மந்திரியாக சஞ்சீவி ரெட்டியார் வந்திருக்கிறார்!

வலியைப் போக்க—உடல்
நலிவை நீக்க சஞ்சீவி மூலி

கைப் பயன்பட வேண்டும்! ஆனல் இந்த சஞ்சீவியார் புதிய வலியை உண்டாக்கி விட்டுள் ளார்!

ஆகஸ்டு 2-ஆம் தேதி சேலத்தில் சுதேசி பொருட்காட்சியைத் திறந்து வைக்கும்பொழுது, இரும்பு மந்திரி சஞ்சீவி ரெட்டியார் புதிய ஐயப்பாடு களைக் கிளப்பிவிட்டுவிட்டார்! சேலம் இரும்புத் தொழிற்சாலையுடன், விசா கப்பட்டினம், ஹாஸ்பட் ஆகிய இடங்களில் இரும்புத் தொழிற்சாலை கள் உண்டாக்குவது பற்றிய யோச னைகளையும் கலந்துவிட்டு, நிபுணர் கள் பார்த்து எது சரியென்கிறர் களோ அதன்படி தாம் நடக்கப் போவதாகத் தெரிவித்துள்ளார்.

சேலம் இரும்புத் தொழிற்சாலை பற்றி, சேலத்திலேயே இரும்பு மந்திரி பேசியிருப்பது பலருக்குக் குழப்பத்தையும் ஐயத்தையும் தந் திருக்கிறது.

சேலத்தில் இரும்புத்தொழிற்சாலை ஏற்படுத்துவது பற்றிய யோச னையை, மற்ற இடங்களில் உள்ள திட்டங்களுடன் சேர்த்துப் பார்க்க நினைப்பது, சேலம் திட்டத்தைக் கைவிடும் நோக்கமா என்ற ஐயப் பாடு எழுந்துள்ளது. இந்த ஐயப் பாடு நியாயமானது, இயல்பானது.

சேலம் இரும்புத் தொழிற் சாலைத் திட்டம் இன்று நேற் றல்ல, கடந்த 20 ஆண்டுக ளாகவே ஆராயப்பட்டு வருகி றது. மண்ணியல் ஆராய்ச்சி யாளர்கள் 1944-லிருந்தே துரு வித் துருவி சேலம்—திருச்சி பகுதியில் உள்ள இரும்புக் கனி வளத்தின் அளவை ஆராய்ந்திருக்கிறர்கள்.

தொழில் நிபுணர்கள் கடந்த பத்தாண்டுகளாக விரிவான ஆராய்ச்சி செய்திருக்கிறர் கள்!

இரும்புத் தொழிற்சாலை அமைப்பதற்கான விரிவான திட்டத்தை தஸ்தூர் கம்பெனி என்ற ஒரு நிபுணர் அமைப்பு கடந்த நான்கு ஆண்டுகளாகத் தயாரிக்கும் வேலையில் ஈடுபட் டிருந்தது!

இவ்வளவு ஆராய்ச்சிகள் நடந்தேறி, சாதகமான முடிவு வந்தும், காலதாமதம் காட்டு வது எதற்காக?

சேலத்தில் இரும்புத் தொழிற் சாலையை அமைக்கலாம் என்பதற் கான அறிக்கை தஸ்தூர் கம்பெனி யிடமிருந்து வந்துவிட்டது! இலாப கரமான முறையில் சேலம் இரும்புத் தொழிற்சாலை இருக்கும் என்று தஸ்தூர் கம்பெனியின் நீண்ட அறிக்கை வெளிப்படுத்துகிறது.

இதுவரை, "தஸ்தூர் கம்பெனி யின் அறிக்கை வரட்டும், சேலம் இரும்புத் தொழிற்சாலை வேலையைத் துவக்கலாம்!" என்று மத்திய அர சாங்கம் கூறிவந்தது. இப்பொழுது அறிக்கை—மிகச் சாதகமான அறிக்கை—வந்துவிட்டது. சேலத் தில் தொழிற்சாலை அமைப்பதைக் கவனிக்காமல், விசாகபட்டினம், ஹாஸ்பட், கோவா என்று பல்வேறு இடங்களைச் சுற்றிப் பார்க்கச் சஞ்சீவி ரெட்டியார் புறப்பட்டு விட்டார்.

இரும்பு மந்திரி கனம் சஞ்சீவி ரெட்டியாருக்கு வரவேற்பு தந்து பேசிய சேலம் நகராட்சித் தலைவர் தோழர் ஆர். இராமகிருஷ்ணன் அவர்கள்கூட, சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை துவக்கப்படுவதற் கான அறிகுறிகளைத் துளிக்கூட காணேமே யென்றும், சேலம் திட் டம் கைவிடப்பட்டு விட்டதோ என் றும் ஐயப்பாடு ஏற்பட்டுள்வதாகவும் குறிப்பிட்டிருக்கிறர்.

பொருட்காட்சி ஆரம்ப விழாவுக் குத் தலைமைவகித்த காமராசர் அவர்கள், சேலம் திட்டம்பற்றி விரிவான முறையில் ஆராய்ந்து சென்னை அரசாங்கம் டில்லிக்கு ஒரு அறிக்கை அனுப்பியிருப்பதாக வும், தொழிற்சாலை ஏற்படுத்துவதற் கான விவரங்கள் முழுவதும் சேக ரிக்கப்பட்டு தரப்பட்டுள்ளதாகவும், மந்திரிகள் மாறியதாலேயே திட்டம் கைவிடப்படும் என்று யாரும் சந் தேகப்படவேண்டாம் என்றும் தெரி வித்திருக்கிறர்.

"சந்தேகப்படவேண்டாம்" என்று கூறுவதே, பலருக்கு அத்தகைய சந்தேகம் உண்டாகியிருப்பதை உணர்த்துவதாகும்.

(தொடரும்)



# சித்திரம் பேசுது!

இந்தா, பிடியிதை, எழுது ஒரு பாட்டு;
என்று சொல்லி அண்ணா கொடுத்தார்
அட்டையில் ஒட்டிக் கிடக்கும் அந்த
எண்ணம் தூண்டும் எழில்மிகு ஓவியம்!

ஓசை துள்ளும் பாட்டு எழுதிட
ஆசை கொண்டு சரிசரி என்றிட்டேன்;
ஓவியம் கொண்டு ஒதுக்கிடம் அமர்ந்து
காகிதம் பேனா கையில் எடுத்து
எழுதத் தொடங்கினேன், ஏக்கம் பிறந்தது'
என்னத்தை எழுதுவேன்! எப்படி எழுதுவேன்!
எழுத்து வேந்தன் எழுதிய ஓவியம்,
எதையெண்ணி எழுதினாரோ எப்படி அறிவேன?
கதையேதோ கதைத்திடலாம்—
அதைத்தான் அடியேன்
இப்போது செய்திடுவேன்; தப்பது அறிவேன்
தப்பவேறு வழிஇலை; ஒப்பிடும் நீர்இதை!

◘

சப்பாணிப் பிள்ளையாராய் அப்பா முதியவர்
சட்டமுடன் அமர்ந்து சமர்த்துப் பிள்ளைக்கு
வாழும் வழியை வக்கணையாய் மொழிகிறார்:
அப்பா சமர்த்து, சமர்த்துதான் நீ
அப்பா என்றாலும் தப்பாது விடேன்
நெஞ்சம் உணர்ந்தது நேராய் உரைப்பேன்
என்றே சொல்லி எகிறிக் குதித்தாய்
ஏற்றமும் தோற்றமும் எளிதாய்க் கிடைத்தது;
கொள்கை தந்ததைக் கோணலாய்க் கொண்டாய்.
என்னால் எல்லாம், எல்லாமே என்னால்
என்றே சொல்லி ஏமாந்த பேரை
கூட்டித் திரட்டிக் கும்பல் சேர்த்து
கூட்டம் போட்டு ஆ! ஊ! என்றாய்;
நோட்டம் பார்த்தாய் நிலைமை உணர்ந்தாய்,
கோட்டைக் குள்ளே குதித்துச் சென்றிட
நாமராசா நாமாவளி நன்றாய்ப் பாடினாய்!
"ஆமாம்! வாஉள்ளே" என்றார்; சென்றாய்.

சென்றிடும் இடத்தில் செல்வாக்குப் பெருகிட
அன்றே திட்டம் போட்டிருப் பாய்நீ
எனினும் மகனே, என்மனப் பித்தால்
அநுபவம் சொல்வேன், அமைதியாக் கேட்டிடு!
இன்றுள்ள இடம் என்றும் கிடைக்கும்
என்று நினைத்து ஏமாந் திடாதே
வாசனைக்குச் சேர்ப்பது வாய்க்குப் போகாது
காரியம் ஆனதும் கரிவேப்பிலை ஆவாய்
நாமராசர் வழியிது, நாடறியும்; நானறிவேன்!
என்று முதியவர் எடுத்துச் சொல்லும்
கருத்தைக் கொண்ட கவின்மிகு படமோ!

◘

காவி கட்டிய சாமி ஒன்று
கூவி சீடனை அருகே அழைத்து
ஏவிடும் பணி ஏதோ இருக்குமோ?
சாமி சொல்லிடும் சங்கதி என்னவோ?
காணிக்கைக் கணக்கைக் காட்டாதே வெளியில்
பாவி அதிகாரிகள் பாழும் கண்ணில்
பட்டு விட்டால் விட்டு விடுவார்களா?
குட்டினாலும் மூடனே எட்டவில்லையே என்கிறாரா?

ஒன்றுக்கும் பயனில்லை, உதவாக்கரை தண்டச்சோறு
ஓடு மடத்தை விட்டு, ஓடி
மந்திரி நந்தா மண்டலில் சேர்ந்திடு
என்றிடும் பேச்சா நின்றிடுவோன் கேட்பது?
அம்பிட்டு உருவிலி அனலாய் வாட்டுறான்
கும்பிட்டு நிற்காதே கூப்பிடு கோவையை
குத்துக் கல்லாய் குமைந்து நிற்காதே
போ! போ! கொண்டுவா கோப்பை என்கிறாரா?

◘

எதுகருதி எழுதிய ஓவியமோ! எனக்கு
அதுஇது என்று காட்டத் தெரியவில்லை.
ஆசை வெட்கம் அறியாது, அதனால்
பாட்டென்று நீட்டி விட்டேன்;
பார்த்துப் பொறுத்திட வேணும் இதனை.

மா.கி. தசரதன்




சின்ன காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "அல்லி" அச்சகத்தில், (உரிமையாளர்) சி. என். ஏ. இளங்கோவனால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணாதுரை.